அமரர்

## திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்கள்

(முன்னாள் இளைப்பாறிய ஆசிரியை)

புகையிரத நிலைய வீதி - சாவகச்சேரி

# நினைவு மலர்

**14 - 01 - 2002**



மலர்வு :
20 - 12 - 1929

உதிர்வு :
15 - 12 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு அவர்கள்

(முன்னாள் இளைப்பாறிய ஆசிரியை)

**புகையிரத நிலைய வீதி,**

**சாவகச்சேரி.**



**மலர்வு :**
**1929 - 12 - 20**

**உதிர்வு :**
**2001 - 12 - 15**

**- திதி வெண்பா -**

கார்த்திகைத் திங்கள் சனிவாரம் முப்பதிலே
பூர்வபக்கம் திதியாம் பிரதமையில் - மூலமாம்
நட்சத்திரத்தில் மகேஸ்வரி அண்ணலடி
தொட்ட நாள் என்றே தொடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபுராணம் - திருச்சிற்றம்பலம்

1. தேவாரம் : மூன்றாம் திருமுறை. சம்பந்தர் தேவாரம்
திருக்கோணமாமலை - பண் - புறநீர்மை.
சுவாமி பெயர் : கோணிசர்; தேவியார் : மாதுமையம்மை.

தாயிலுநல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயிலுமனத்து மருவிநின்றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பானீங்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.

2. திருவாசகம் : எட்டாந்திருமுறை - திருவாதவூர் (மாணிக்கவாசகர்)
திருப்பெருந்துறையில் அருளிய திருச்சதகம்
(கட்டளைக் கலித்துறை)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திருவிசைப்பா - (திருமாளிகைத்தேவர்) - ஒன்பதாம் திருமுறை

அற்புதத்தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னை ஐந்தெழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கணகம்
பற்பதச்சுவையும் பைம்பொன்மாளிகையும்
பவளவாய் பனைமுலையவையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

4. திருப்பல்லாண்டு - (சேந்தனார்) ஒன்பதாம் திருமுறை

மன்னுதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவா ளுமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

5. திருப்புராணம் :

சீராருந் சதுர்மறையுந் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராறு மணிமன்று லெடுத்ததிரு வடிபோற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு - திருப்புகழ் - திருவாவினன்குடி (பழநி)
மூன்றாவது படைவீடு - அருணகிரிநாதர்.

சிவனார் மனங்குளிர உபதேச மந்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் - - - குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்த நின
செயலே விரும்பியுளம் - - - நினையாமல
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞசலென - - - வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது - - - புரிவாயே.

நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தை மகிழ் - - - மருகோனே
நவலோக முங்கைதொழ நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு - - - விளைகோவே

தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் - - - வடிவேலா
திருவாவி னன்குடியில் வரவேள் சவுந்தரிக
செகமேல் மெய் கண்டவிறல் - - பெருமாளே.

- சுபம் -

வாழ்த்து : தென்நாடுடைய சிவனே போற்றி
என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க
லோகா சமஸ்தா சுகினோ பவந்து.
- திருச்சிற்றம்பலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கி நிற்கும் இதயங்கள்

**மக்கள்**

ஆண்மக்கள் நால்வரையும் அன்போடரவணைத்து
வீண்மக்கள் ஆகாமல் விளைவு சிறப்பேற
என்றும் அருகிருந்து இயற்றி எழுச்சியுடன்
அன்றாடம் கல்விக்குள் ஆழ்த்தி அறிவூட்டி
அன்பும், இரக்கமும், பண்பாடும், ஆற்றல்களும்
நின்றே நிலைத்து நிமிர்வுக்குள் வாழ்வளித்த
அன்னையே எம்மைவிட்டுப் போனதன் மர்மமென்ன?
எந்நாளும் எம்மோ டிருந்து சுகம்பேசி
வாழக் கொடுத்தானா ஆண்டவன்? ஏனிந்தச்
சூழைக்குள் எம்மைக் கருக்கினான்? என்றுன்னைக்
கண்டு மன வேதனையைத் தீர்க்க முடியும்?
இனிதான வார்த்தைகளை உன்போல் சொரிய
மனிதரிங்கு யார்வருவார் அம்மா மனம் வெந்து,
பாதை தெரியாக் குருடவிகளாய் நிற்கின்றோம்.
ஆதரவுச் சாலை அடைபட்ட தெம்விதியோ?

**மருமக்கள்**

மாமியென்று நாங்கள் மனம்நிறைய அழைப்பதற்குப்
பூமியிலே பெற்றிருந்த செல்வம் எமைவிட்டுப்
போனதெங்கே யென்று பொங்கி வெடிக்கின்ற
வாதையினை, எங்கே வழங்கிக் கழுவலாம்?
சாதனைகள் எத்தனையோ சாதித்த அத்தையுங்கள்
நாதம் அறுந்த தென்ன? நாங்களினி யாரையெங்கள்
மாமி என நினைத்து மனங்கள் குளிர்விப்போம்?
தேம்பி அழும் கண்ணீர் துடைக்க எவர்வருவார்?
ஆதரவும், அன்பும், கருணையும் காட்டியெமைப்
பூதலத்தில் வாழ வழிகாட்டி நின்றீரே!
தேடியெங்கு காண்போம்? தினந்தேடிக்காண்போமா?
வாடி வதங்கி வலுவிழந்தோம் வழி தெரியோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி

"உடன்பிறப் பில்லா உடம்புபாழ்" என்று
திடமாக ஔவை சொன்ன சொல்லை நினைந்து
அழுது அழுது என் கண்ணீரும் வற்றி
விழுதாய் ஒழுகி வீங்கிய கண்களைத்
துன்பத்தில் நீக்கத் துடித்து வெதும்புகிறேன்.
என்துயரம் உன்துயராய் எண்ணி நடத்தினாய்,
"அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாள்" என்று நீ
சொன்ன குறள் காதில் சுகமாய் ஒலிக்குதே!
மின்னலாய் நீமறைந்த மாயம் மெலியவைத்து
பின்னிக் கசக்கிப் பிழிகிறதே என்ன செய்வேன்?

## பேர்த்திமார்

கொஞ்சி மகிழும் மலர்ச்செடிகள் "இரண்டே" நாங்கள் பேர்த்திகளாய்
மிஞ்சித்துள்ளி விளையாட இருந்தாய் பாட்டி எங்களுடன்
கிஞ்சித்தேனும் கோபமின்றிக் கூட்டி நடத்திச் சுகமூட்டி
அஞ்சாப் புத்திக் கதைகூறி அணைத்தாய் இனிக்க அடிதொட்டோம்.

ஆலைக் கரும்பாய் மனங்கசங்கி, அழுது உலர்ந்த கண்களுடன்
பாலைத் தேடுங் குழந்தைகளாய் பரிதவித்துக் கலங்குகிறோம்.
வேலைப் பாய்ச்சி எம்மிதயம் வீழ்த்திப் போனாய் தாங்குதற்கு
ஏலாதின்று திணறுகிறோம், அன்னாய் எங்கே காண்பமினி?

## உறவினர்

எத்தனையோ "உறவுமுறை" சொல்லிப் பேசி
இசைந்திருந்த நாட்களெல்லாம் இறந்தகாலச்
சொத்தாக்கி, இனிமையினைத் தொலையவிட்டு
சுகம் உன்னோடேகிற்றே! சூழ்ச்சிபோல,
சுத்தமாய், மனந்திறந்து மகிழ்ந்திருந்தாய்
சூனியத்தில் எமைவிட்ட நியாயமென்ன?
முத்தமிழாய் வலம்வந்து எம்மையாண்டாய்
மூச்சடங்கித் தேம்புகிறோம் முறையெங்கம்மா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள்

சாவகச்சேரியிற் பிறந்த எம் அன்னாய்!
சாதனை பலபுரிந்தின்பத்தில் திளைத்து,
பூவர சான நீ கல்முனை வந்துன்
புண்ணிய மகன் வாழ் மனையிலே இருந்து
காவலுக் கென்றும், கடமையின் பொருட்டும்
கண்ணியச் சேவைக்கு வந்த வேளைக்குள்,
தேவரசானதைக் கேள்வியுற்றதனால்
தேர்ந்தெமதுள்ளங்கள் தேம்புதேயம்மா!

## தேறுதல்

பிறப்புக்குள் இறப்பை வைத்துப் பெருமைக்குள் சிறுமை மாட்டி
சிறப்புக்குள் ஒறுப்பைத்தீற்றி சிலம்பமிட்டாட்டும் அண்ணல்,
நிறுப்பதே விதிக்குள் ஆடும், நிர்மலன் நீட்டும் வாழ்வை
இருப்பென நினைத்தல் மாந்தர் எளிமையைக் காட்டும் 'ஆடி'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் தடயங்கள்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை பண்பும், பயனும் அது" என்ற பொய்யாமொழிப் புலவனின் வாக்குக்கு அமைவாக வாழ்ந்து, இம்மண்ணின் லௌகீக வாழ்வை நுகர்ந்து, இறையடி சேர்ந்த திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் வாழ்க்கைத் தடயங்களை இங்கே மீட்டுப் பார்க்கின்றோம்.

இலங்கைத் திருநாட்டின் தலையென்றும், தமிழர் கலாசாரத்தின் உன்னத உறைவிடமென்றும், இந்து தர்மத்தின் உயிருட்டமுள்ள தளமென்னும் புகழ்ந்து பேசப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், சாவகச்சேரி சிவன் கோவிலடி என்ற குழுமை மண்ணிலே சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளாக 1929ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதி தாய்மடியில் சேயானார். இவருக்கு அருமையும், இரக்கமுமுள்ள சகோதரியாக நாகேஸ்வரி இணைய உலக வாழ்வு இன்புறு நிலையில் அமைந்து தித்தித்தது.

இவரது கல்விக்களமாக (Driberg) டிறிபேர்க் கல்லூரி அமைத்து நெறிப்படுத்தியது. படிப்பில் ஆர்வமும் சமய கலை, கலாசார சிந்தனைகளில் ஊக்கமும் கொண்ட நிறைவான மாணவியாக விளங்கிய காரணத்தால் கல்விப் பெறுபேறு, அன்றைய உச்சநிலையான ஆசிரியத் தொழிலைக் கொடுத்து கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் தன்னுடைய ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்த பின், மாணவர் சமூகம் முன்னேற்றத்தக்க வழிகளில் கற்பித்தல் சேவையைச் சிறக்கச் செய்தார். அக்காலத்தே யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொழும்பு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவரது சேவை தொடர்ந்தது.

1959ஆம் ஆண்டு மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தொழிற் திணைக்கள இலிகிதர் வீ. போ. கார்த்திகேசு அவர்களை அன்புக் கணவராகக் கரம்பற்றித் தனது இல்வாழ்வை இன்பம் நிறைய அனுபவித்தார். அக்காலத்தே முதலாவது புத்திரனான பகீரதன் 1960இல் பிறந்தார். அன்பு மகனுடன் அரவணைய வாழ்ந்தார். 1963இல் மொழிப்பிரச்சினையை முன்னிட்டு "உரிமையுடன்" ஓய்வு பெற்ற கணவர் கார்த்திகேசு அவர்கள் சட்டக்கல்லூரி சென்று கற்று, அப்பயிற்சி மூலம் சட்டத்தரணியாகி, 1966, 67ஆம் ஆண்டுகளில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக அமர்ந்து பணியாற்றி வந்தார். தொடர்ந்து அவரது சேவையில் மனிதநேயம் மதிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு சாவகச்சேரி சத்தியம்மன் வித்தியாலயத்தில் கற்பித்தபோது திருமதி. மகேஸ்வரி அவர்கள் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்று குடும்பச் சேவைக்குள் தன்னை உள்ளிட்டார். 1997ஆம் ஆண்டு இம்மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைபோதுமென்ற காரணத்தினாலோ இறைவனின் அழைப்பின் காரியத்தாலோ கணவர் கார்த்திகேசு அவர்கள் இறைபதமடைந்தார்.

குறித்த இடைக்காலத்தே இத்தம்பதிக்கு மேலும் இரவீந்திரன், சுபேந்திரன், பிரகலாதன் ஆகிய மூன்று ஆண்மக்கள் பிறந்து, நால்வரும் கல்வித்துறையில் மேல்நிலை பெற்றுச் சமூக மதிப்புடன் வாழ்கின்றனர். எந்திரிகளாக பகீரதன், சுபேந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் முன்னணியிற் திகழ, இரவீந்திரன் (கனடா) பிரகலாதன் (இங்கிலாந்து) இருவரும் தகுதியான நிலையில் வெளிநாடுகளில் தம்வாழ்க்கையை உயர்த்தி வாழ்ந்து வருகின்றனர்.

இத்தம்பதியினரின் அருமை மருமக்களாக காலஞ்சென்ற பத்மினி (மின்பொறி யியலாளர்) சுபைதா, பிரமிளா ஆகியோர் குடும்ப விளக்கங்களாக இணைய மங்கலமாகக் கருத்துடன் ஊர், உலகுமெச்ச வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்குள் ஏற்பட்ட ஊரழிப்புகளால் தென்மராட்சி தாக்கப்பட்ட வேளை, அங்கிருந்து மானிப்பாய்க்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு வாழ்ந்துவந்த காலத்தே நம்நாட்டின் அரசியல் கலாசாரம் கொடுத்த அருவருப்பு அன்பிதயமான திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களையும் வாட்டியதுண்டு.

2000 - 04 - 02இல் இந்நாட்டில் உயர்ந்த உத்தியோகத்தில் பெறுமதியுடன் வாழும் மூத்தமகனின் மனைவி மரணமானதும் இவருக்கு மனவேதனையை உண்டுபண்ணியது. கல்முனையில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக பதவியிலுள்ள பகீதரனின் மகளாக மதுரா, கனடாவாழ் இரவீந்திரன் மகளாக வைசகி ஆகிய இரண்டு பேத்திமாரின் பாட்டியான திருமதி மகேஸ்வரி அவர்கள், வாழ்வின் அனைத்தையும் அனுபவத்தில் உணர்ந்தவர்.

இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தாயணைப்பின்றி வாழ்கின்ற பேத்தியின் வாழ்வுக்கு உறுதுணையாக இருக்க நினைத்து, கல்முனை நீர்ப்பாசன இலாகா விடுதியில் வாழும் மூத்த மகனுடனும், பேத்தி மதுராவுடனும் வாழ்ந்த வேளையில் 2001 - 12 - 15 பிற்பகல் 3.30 மணியளவில் ஆன்மா உடலை நீத்து இறையடி சேர்ந்தது.

எல்லோர்க்கும் இனிய சுபாவத்துடன் அன்பு முகம் மலரப்பேசி, ஆட்படுத்தி உதவிகள் புரிந்து வாழ்ந்த எம் அன்புத்தாயின் ஆன்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம்.

**- குடும்பத்தினர் -**

நீர்ப்பாசன இலாகா விடுதி
கல்முனை
2002 - 01 - 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கல்முனை நீர்ப்பாசன
விடுதியில் தற்காலிகமாக வசித்தவருமான
அமரர் திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்கட்கு

# 31 ஆம் நாள் கண்ணீர் பாமாலை

**அன்னை மடியில்:** **கூற்றன் பிடியில்:**
**20 - 12 - 1929** **15 - 12 - 2001**

ஒரு கொடியின் இருமலராய்
வந்து பிறந்தோம் நாமிருவரும்
அறநெறியாய் உன்வாழ்வு
அமைந்ததால் நீடுளி வாழ்ந்தாய்
நீதி நாயகன் உன்துணையானான்
நல்ல புதலவர்களும் நின் சொத்தானார்கள்.

ஆசையாய் எண்ணியிருந்தோம்
அக்காவே! நீ இன்னும் வாழ்வாய்யென
இதயமற்ற கூற்றனின் கயிற்றிற்கோ
இவையெல்லாம் புரியவில்லை
எத்தனையோ சிரமங்கள் எதிர் கொண்டு
எடுத்து வந்தேன் உனைக் கல்முனைக்கு

ஆசிரியைப் பணியில் உனையர்ப்பணித்து
எத்தனையோ பேருக்கு ஏணியானாய்
குடும்பத்தின் உத்தமியாய் வாழ்ந்தாய்
பாசத்தில் உறைவிடமாய் தெரிந்தால்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்பதன் பொருளுமானாய் நீ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை ஆண்டுகள் ஓடினாலும்
என் உடன் பிறப்பே நீ தந்த பாசம்
அகலாது; அழியாது என்றுமே மாறாது
வாடாத மலராய் உன் வண்ணமுகம்
வந்து மறையுது எங்கள் மனங்களில்
அதைபெண்ணி இதயம் தான் அழுகின்றது.

எங்கு காண்போம் இனி எப்படிக் காண்போம்
உனைப்பறி கொடுத்த துயரத்தால்
தவிக்கின்றோம் - விழியால் நீர் வடிக்கின்றோம்
மறுபிறப்பொன்று உனக்கொன்றிருந்தால்
மீண்டும் நீ எங்களிடமே வந்திடல் வேண்டும்
உன் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவன் ஆசிதனை வேண்டுகின்றோம்.

அடைக உன் ஆத்மா சாந்தி!
இப்படிக்கு,
**பிரிவால் துயருறும் சகோதரி நாகேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மகனின் மனச் சுமையிலிருந்து...

புத்திரனைப் பெற்றுப் புதுமனிதனாக்க எண்ணிப்
பத்தியங்காத்து, பனி, மழையில் தள்ளி நின்று,
தின்பண்டம் நீக்கி நித்திரையும் கொள்ளாமல்
அன்போடணைத்து அமுதமும் தாலாட்டும்
பாடிச் சீராட்டிப் படிக்கவைத்து பண்பாட்டின்
தேடல்களைத் தந்து சிறப்பித்தாய் என் அம்மா!
வயதிருபத் திரண்டில் பொறியியலில் நான் நுழைய
சுயத்தைக் கொடுத்துத் துன்பங்கள் ஏற்று
நலங்கள் அறுவடையாய் கண்ட அருமைத்தாய்!
பட்டமளிப்பு விழாவிற் கலந்து கொண்டு
மட்டற்ற சந்தோஷப் பூமாலை சூடிநின்றாய்!
ஆசிரியை யாயிருந்த காரணத்தால் கல்வியினைப்
பூசியெனைச் சோடித்த பூரணை வெண்மதிநீ!
மண்வாழ்வில் ஏற்ற தகுதியுடன் நான் உயர்ந்து
திண்மையுடன் வாழத் திருத்தந்த அன்பிதயம்!
மக்கள் அனைவரையும்மேல் நிலைக்குக் கொண்டுவர
எக்கணமும் சிந்தித்து இயற்றிய மெய்த்தவங்கள்,
சித்தித்த காரியங்கள் சிறப்புற்ற சேவைகளும்
எத்திக்கும் நன்மக்கள் ஈடேறி வாழவிட்டாய்!
மூத்தமகன் மட்டுமிந் நாட்டில் பெருமதியாய்
வாழுகின்றான். அங்கு சென்று வாழ்வோ மெனவந்து,
அன்னை இழந்துநிற்கும் பேத்திக்கும் ஆறுதலாய்
இறுதிக் காலத்தேயும் சேவைக்கு வந்துதங்கி
என்தனிமை போக்க எண்ணிய எண்ணத்தை
நிறைவேற்ற வந்த இதயமே! அன்பன்னாய்!
மூன்று மாதங்கள் பாய்ச்சிய பாசத்தின்
ஊன்று கோலான உறவை உடன் பிரிக்க
ஆண்டவன் எண்ணி எடுத்தானே உனையங்கு!
பாசப் பகிர்வு அவனுக்கும் தேவையோ?
இறுதிக் கடமைகளை என்மூலம் பெறத்தானா
பொறுதியுடன் எனைச் சேர்ந்தாய்? போனவழிசிறக்க
ஆன்மா அடைக இறைபதத்தை என்றுதினம்
பூசித்தேன் அம்மா புனிதம் உயர்வடைக!
நேசிப்பு எந்நாளும் நீளும்.

**- மூத்தமகன் - பகீரதன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புள்ள அம்மாவே

ஆறாத்துயரில் ஆழ்ந்த மீளாத்துயில் கொண்ட எனது அம்மாவே அன்புத் தெய்வமே எதை நினைத்து என் மனதை ஆற்றுவேன்.

ஊன் கொடுத்து உயிர் கொடுத்து வாழ வைத்தாய். உனக்கென வாழாது எந்நேரமும் குடும்பத்திற்காக உழைத்தாய். ரவி, ரவி என நீங்கள் அழைத்த குரல் எந்நேரமும் காதுகளில் ஒலிக்கிறதே. தாய் என்னும் சொல்லுக்கு இலக்கணமானவளே! நான் சிறுவனாக இருந்தபோதில் நோய் என்று வரும்போது எனக்கு இரவிரவாக தூங்காமல் இருப்பீரே அம்மா. அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளைக் கவனித்து கணவனையும் பிள்ளைகளையும் கவனித்து வேலைக்கும் செல்வீரே அம்மா. வளரும் காலத்திலே எத்தனை தொல்லைகள் கொடுத்திருப்போம், கோபமே கொள்ளாது எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்து ஆவன செய்வீரே அம்மா. களைப்பு என்று ஒரு நேரமும் கூட படுத்ததில்லையே அம்மா. இருக்கும்வரை கடைசி நிமிடம்வரை உமக்கே வாழாது எங்களுக்காய் வாழ்ந்த தாயே! எனக்கு மீண்டும் பிறப்பு உண்டேல் என்தாயே நீவிரே எனக்கு அம்மாவாக வேண்டும். நீர்காட்டிய வழியில் நான் வாழ்வேன். உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மகன்

**ரவி**

146, Dowling Avenue # 307<br>
Toronto<br>
Ontatio<br>
M6K 3A7<br>
Canada.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய மகன் இதயம் திறந்து...

எம்மையெல்லாம் பெற்றெடுத்து, உணவளித்து வாழிகாட்டி வளர்த்தெடுத்து உயர்நிலைக்குக் கொண்டு வந்த அம்மாவே பின்நோக்கு பார்வையிலே எமக்காக உங்களை வருத்தி பட்ட கஷ்டங்கள் கண்முன்னே நிற்கின்றன. ஆதவன் வருமுன் துயிலெழுந்து அடுப்படியில் காலை முதல் மதிய சமையல் வேலை முடித்து பின் சந்தை சென்று வீடு திரும்பி அதன் பின் விரைந்து பாடசாலை சென்று ஆசிரியை தொழில் பார்த்து மாலையில் வீடு திரும்புகின்ற நேர அட்டவணைதனை இளைப்பாறும் வரை கொண்டு தனது கடமைகளைச் சரிவரச் செய்வதுடன் பலருக்கும் உதவுகின்ற மனப்பாங்கினையும் கொண்டமையால் பலராலும் மதிக்கின்ற ஆசிரியையாகவும் சக ஆசிரியர்களின் நண்பியாகவும் இருந்தீர்கள்.

கொழும்பிலே கந்தோரில் தொழில் பார்த்த அப்பாவை கரம்பிடித்து முயற்சியினால் படிப்படியான உயர்ச்சியை வாழ்வில் கண்டு நான்கு புதல்வர்களைப் பெற்றெடுத்து அப்பா சட்டத்தரணியாக வருவதற்கும் நாம் வளமாக வாழ்வதற்கு வழிசமைத்து குடும்பத்தின் ஒளிவிளக்காக திகழ்ந்தீர்கள்.

அப்பாவின் இழப்பினால் மனம் தளர்ந்தாலும் ஆக வேண்டிய கருமங்களை சரிவரச்செய்து நாட்டின் நிலைமை காரணமாக இடம்பெயர நேரிட்டாலும் பிறந்து வாழ்ந்த இடத்தை நேசித்து அங்கு ஒருகால் போகலாமென்றிருந் தீர்கள். ஆயினும் நிலையில்லா இவ்வுலகம் எல்லோரும் போகுமிடம் போவ தற்கு காலம் வந்துவிட்டது என்பதை முன்பறிந்து அண்ணனிடம் போயிருந்து ஆண்டவனை அடைந்தீர்கள்.

பொங்குகின்ற கவலைதனை அமைதியுடன் தாங்கிக்கொள்ள மனத்திடம் தந்திட்ட அன்னையை தொழுது அம்மாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு மகன்,
**சுபேந்திரன்**
அவுஸ்ரேலியாவின் பூங்கா மாநிலத்திலிருந்து

2/1131, Grevillea Road,
Wendoureesvic - 3355
Australia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையைப் போல் தெய்வமில்லை

எனது பெற்றோருக்கு வந்துதித்த நான்கு புதல்வருள் நான் கடைசி மகன். எனது அன்புக்குரிய தாயார் எம் நால்வரையம் கண்களை இமை காப்பதுபோல மிகவும் பாசத்துடன் வளர்த்து, ஆசிரியர் என்ற வகையில் எமக்கெல்லாம் கல்வி புகட்டி, சான்றோர் மத்தியில் எங்களையும் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டியுள்ளதை எண்ணிப் பார்க்கும்போது அவர் பிரதி உபகாரம் என்று செய்த நன்றியை மறக்க முடியாது.

எமது ஆரம்பக்கல்வியை கற்கும் வாய்ப்பினை எமது ஊரான சாவகச்சேரியில் ஏற்படுத்தி, மிகவும் அன்பாக பாடசாலை செல்ல ஊக்குவிப்பார். நானும் எனது சகோதரரும் உயர் கல்வி கற்கும்பொருட்டு யாழ்நகரிலுள்ள பிரபல உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்க வசதிகள் அனைத்தையும் எமது தந்தையாரின் துணையுடன் செய்து தந்தார். தனது சுகநலன்களையும் பொருட்படுத்தாது எம்மை கரிசரணையுடன் வளர்த்து ஆளாக்கி விட்டதை எண்ணிப் பார்க்கும்போது நான் அவருக்கு எவ்வித பிரதியுபகாரத்தையும் செய்ய வாய்ப்பு ஏற்படவில்லை என்பதை நினைத்து வருந்துகின்றேன்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற கூற்றுக்கமைய தனது புதல்வர்கள் பாரினில் நாலாதிசையிலும் சென்று கல்வி கற்று உயர் நிலையில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வதை நேரில் பார்க்காவிட்டாலும் மானசீகமாகத் தனது மனக்கண்ணால் கண்டு மகிழ்ந்து தனது இறுதிக்காலத்தில் இல்லையே என்ற ஆதங்கத்துடன் அவரது ஆன்மா இறைவனடி சேர்ந்து விட்டது.

அப்படியிருந்தும் எனது அன்னை தனது உயிருக்குயிராக நேசித்து உடன் சேர்ந்து வளர்ந்து வந்த அவரது சகோதரி நாகேஸ்வரி அன்றியும் எனது மூத்த சகோதரனும் அவரருகே இருந்து இறுதிக் கடமைகளை செய்ததையிட்டு அவரின் ஆன்மா திருப்தியடையும் என்றே நாம் ஆறுதலடைகின்றோம்.

"அன்னையைப்போல் ஒரு தெய்வம் வேறில்லை" என்ற சான்றோரின் வாக்குக்கமைய எனது தெய்வமாம் அன்னையில் மறைவினால் துயரக் கண்ணீரை காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கா. பிரகலாதன் மகன்**
287A, High Street North
Manor Park
London E12 6SL
U. K.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அன்பான மாமியே

உம் வீட்டில் நான் மருமகளாக காலடி வைத்தபோது என்னை மகளாக அல்லவோ வாரிக் கொண்டீர். உமது மகள் இல்லாப்பாசத்தை என்மீது பொழிந்தீரே. உம்முடன் இருந்த காலத்தில் பெண்ணுக்குரிய; தாய்க்குரிய இலக்கணங்களை கற்றுத் தந்தீரே. வெகு விரைவில் நான் உங்கள் மகனுடன் கனடா நாட்டிற்கு வாழப்போகிறேன் என்று அதற்கிடையில் நான் போகும் வரை விதவிதமாக உணவு சமைத்துத் தந்தீரே. உடுபிடவைகள் எல்லாம் வாங்கித் தந்தீரே. சினேகிதியாய் உமது பழங்கதைகள் எல்லாம் சொல்லி இரவு பன்னிரெண்டு மணிவரை சிரிக்க வைப்பீரே அம்மா. மகளாய் நீர் செல்லும் இடமெல்லாம் என்னையும் கூட்டிச்சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி பாசமழை பொழிந்தீரே. எதையென்று நினைப்பேன். நான் உங்களுக்கு அன்புடன் பார்த்துப் பார்த்து புதுச்சேலை வாங்கி அன்புடன் அனுப்பினேனே அம்மா. கடைசியில் அது உமக்கு இறப்பதற்கு சிலமணி நேரம் முன்பு நீர் நினைவிழந்து இருந்த நேரமல்லோ கிடைத்தது. அதையும் இறந்த பின் உடுத்து அழகு பார்க்க வேண்டியதாயிற்றே அம்மா. எதையென்று சொல்லி அழுவேன். பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு என்று மனதை ஆற்றி விண்ணுலகிலே உமது ஆத்மா சாந்தி அடைய கண்ணீர் தூவி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகள்
**சுபைதா**

146, Dowling Avenue # 307,
Toronto
Ontario
M 6 K 3 A 7
Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவாத் தங்கையின் உள்ளத்தில் இருந்து...

சிவன்கோவில் மருங்கினிலே சிறப்புடன் அவதரித்தீர்
தவச் செல்வியாக நீரும் தாரணியிற் புகழ் பெற்றீர்
எவரையுமே எள்ளளவும் வருத்தாது தங்கையுடன்
பவனி வந்து கல்முனையில் விண்ணுலகு புக்கீரோ!

ஆசிரிய சேவை தனில் அன்பு முகம் காட்டி நின்றீர்
நேசக் கரம் நீட்டி என்னையும் அதில் ஈர்த்தீர்
பாச மனத்தினராய்க் கூடி வழி நடந்தோம்
பேசாமற் போனதென்ன என் புலம்பல் கேட்கலையோ?

அக்கா என்றழைக்க யாருமே இல்லை இனி
பக்கத்தே நின்று பாசமுகம் பார்க்கவில்லை
எக்காலம் காண்பேன் என்றெண்ணி இருந்தேனே
விக்கித்து நிற்க வைத்த என் வேதனைதான் புரியலையோ.

பெண்ணின் பெருமைதனை மனையாளாய் ஆற்றி வைத்தீர்
கண்மணிகள் நால்வருக்கும் அன்னையாம் பெருமை பெற்றீர்
விண்மீனாம் மருமகளைத் தேடியே நல் மாமியாராய்
மண்ணில் பரிதவிக்கும் பேத்தியை விட்டோடினையோ.

குன்றின் மேல் தீபமாய் என்றும் ஒளி வீசி
குன்றா மணி விளக்காய் இறையடியில் வீற்றிருந்து
என்றென்றும் எல்லோர்க்கும் ஆசிகளை அள்ளி வீசி
நின்று நிலவ வேண்டி எம் விழி நீர் அஞ்சலி

நீங்கா நினைவுடன்

திருமதி அன்னபூரணி தம்பிராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை)
**'தயாபதி'**
சிவன் கோவிலடி
சாவகச்சேரி.
தற்போதைய வதிவிடம்:
இல: 20 கதிரேசு வீதி,
5ம் ஒழுங்கை,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் பொங்கும் துயர் நிறைந்த இதயத்துடிப்புக்கள், தவிப்புக்கள்

"அன்புகிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு"

என்னும் வள்ளுவர் வாக்குக்கிணங்க அன்பிலே உயர்ந்து, அறிவிலே வளர்ந்து, ஆற்றலில் மிளிர்ந்து, பண்பிலே சிறந்து, துன்பத்தைத் துறந்து, பொறுமையின் இருப்பிடமாய், இல்லறத்தை நல்லறமாய்க் கொண்டு பல்வளமும் பெற்று இனிது வாழ்ந்தீர்கள் என் அருமை அண்ணியே! எம் குடும்பத்திற்கு என்ன கண்ணீறு பட்டதோ? அன்றி நாத்திட்டிதான் பட்டதோ உங்கள் மறைவுச் செய்தி கேட்டு திடுக்கிட்டும் திக்குத் திசை அறியாது தடுக்கிட்டு இருந்து விட்டேன்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடப் பெயர்வால் சொத்து சுகம் யாவும் இழந்ததும் பெரிதாகத் தெரியவில்லை. ஒருவர் பின ஒருவராக கல்வியிற் சிறந்தவர்களை இழக்கும்போது பேரிழப்பாகத் தெரிகிறது. நான் கடைசியாகச் சந்தித்தபோது அம்பாறை சென்று சுபேசுக்கு திருமணம் முடித்து வைத்துவிட்டால் என் கடமை தீர்ந்தது என்று கூறினீர்கள். நல்லது வரும்போது பகீரையும், மதுராக் குட்டியையும் அழைதது வாருங்கள் என்று கூறினேனே. நற்செய்திக்குப் பதிலாக கிடைத்தது. தங்களின் துயரச் செய்திதான் என்ன செய்வோம் அந்த பொல்லாத வதியைத்தான் நோக வேண்டும் ஏதோ நல்ல காலம் தங்களை நம்பியிருந்த நும் தங்கையை இங்கிருந்து பரிதவிக்க விடாது அழைத்துச் சென்று பகீரிடம், ஒப்படைத்துச் சென்றுள்ளீர். அவவே தங்களின் மீதிக் கடமைகளைத் தொடரட்டும்

சித்தமதில் பந்தமுடன் பாசத்தோடு
செப்பரிய பண்பாடும் பண்புமோங்க
மைத்துனன்மார் மைத்துனிமார் மனம் உவக்க
மன்னிடும் அன்பாலே பிணைந்த அண்ணி!
இத்தரையிலர் மகேஸ்வரி அண்ணிபோல்
இனிமை நிறை இதயமுளோர் யாருமுண்டோ
அத்தனாம் சிவபதத்தில் மகேஸ்வரியின்
ஆத்மாவும் என்றென்றும் பெறுக சாந்தி

அருமை மைத்துனி

**திருமதி நல்லம்மா பொன்னம்பலம்** (ஓய்வுபெற்ற ஆசிரியை)
மீசாலை

பத்மா இல்லம்
வல்லியானந்தம்
துன்னாலை வடக்கு
கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ வட கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளரின் அஞ்சலிச் செய்தி

திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். பணிவுள்ள மனைவியாக பாசமுள்ள தாயாக கரிசரனையுடன் கல்வி புகட்டும் ஆசிரியையாக தன்னுடைய வாழக்கையைப் பரிபூரணமாக்கிக் கொண்டவர் திருமதி. கார்த்திகேசு. இரவது குடும்பத்தாருடன் பலவருட தொடர்பு என்குண்டு. இவரது கணவர் வீ. பொ. கார்த்திகேசு J.P.U.M எனக்கு வேண்டியவர்களில் மிகமுக்கியமானவர். அவரைச் சந்திக்க நாம் சாவகச்சேரிக்குச் செல்லும் பொழுது எம்மை இனிய முகத்துடன் வரவேற்று அறுசுவை தந்து எம்மை அனுப்பி வைப்பது அம்மையாரின் பண்புகளில் ஒன்றாகும். தமது பாடசாலைக் கடமைகளுக்கிடையிலேயும் இவவிருந்தோம்பல் பண்பினை அவர் விட்டுக் கொடுக்கவில்லை. திரு. கார்த்திகேசு இல்லாத நேரங்களில் திருமதி கார்த்திகேசு சம்பாஷித்துக் கொண்டிருந்தால் நேரம் போவது தெரிவதில்லை. பல விடயங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவும் அனுபவமும் கொண்டிருந்தார். பொது அறிவு முதல் தத்துவ ஞானம் வரை சகல விடயங்களிலும் அறிவுடையவராக அவர் காணப்பட்டார். கணவரின் மறைவுக்குப் பின் சமூக சேவைக்காக தன்னை முழுமையாக அர்ப்பனித்துக் கொண்டார். திருமதி கார்த்திகேசு தன்னை அணுகியவர்களுக்கெல்லாம் புகலிடமும் பொருளாதார உதவியும், பாசமும் காட்டும் பண்புடைய அம்மணியாக அவர் வாழ்ந்தார். 4 மகன்களைப் பெற்ற அவர் மகன்கள் வாழ்க்கையில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்வு கொண்டார். இறுதிக் காலத்தில் தனது மூத்த மகன் எந்திரி பகீரதனுடன் மிகவும் அமைதியாகக் கழித்தார். தாய் அரவணைப்பு இல்லாத தனது பேரப்பிள்ளை மதுராவுக்கு அன்னையாகவும், ஆசிரியையாகவும் அவர் கடமையாற்றினார். யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து தனியாக வாழ்ந்த அவர் இறுதிக் காலத்திலாவது தன் மூத்த மகனுடன் கல்முனையில் வந்து வசித:து அவருக்குப் பெரும் அமைதியையும் பகீரனுக்கு ஆறுதலையும் மனத் திருப்தியையும் அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

**சொ. கணேசநாதன**
கௌரவ ஆளுநரின் இணைப்புச் செயலாளர்
ஆளுநர் பணிமனை
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் திருவடி பெற

மண்டுவில் அம்பாளின் மாண்புமிகு பக்தை கார்த்திகேசு மகேஸ்வரி ஆசிரியை மண்ணுலகில் நல் வாழ்வு வாழந்தது போல வானுலகிலும் ஆத்மா சாந்தி பெற்று அம்பாள் திருவடி பேணி அமைதி பெற அருட்துதி செய்கின்றேன்.

சாந்தி! சாந்தி!!

**க. கிருபானந்தக் குருக்கள**
பிரதம மண்டுவில் அம்மன் ஆலயம்
சாவகச்சேரி.

## உள்ளத்து உணர்வலைகள்

அருள் அருள் என்றே அன்புடன் அருகமர்ந்து
இன்புறு மொழி பேசி இனிமை செய்தீர்
ஆண் மக்கள் நாலவருடன் என்னையும் ஓர் மகனென்று
மாண்புடனே மகிழ்ந்திருந்தீர்
உள் வீட்டு ரகசியமும் கள்ளமில்லாமல் எனக்குரைப்பீர்
உள்ளமதைக் கொள்ளை கொண்டீர் நின் செயலால்
ஷெல் வந்து துரத்தியதால் பல்திசையும் நாம் பிரிந்தோம்
அன்பு மொழி கேட்காமல் ஆசைமுகம் பாராமல் அல்லலுற்றோம்
ஆனாலும் உள்ளெழுந்த உணர்வலையால் ஒன்றிணைந்தோம்
மீண்டும் கண்டுகளித்தோம் உண்டு மகிழ்ந்தோம்.
அன்புப் பேத்திக்கு துணையாகச் சென்ற நேரத்தில்
சொல்லாமல் கொள்ளாமல் விண்ணகம் போனதேனோ?
ஐயாவுடன் அருகிருக்க ஆசைப்பட்டோ?
அருமந்த சகோதரியை, அன்பான மக்களை, ஆசையுள்ள
மருமக்களை, பேத்திகளை மறந்ததேனோ?
நின் ஆத்மா சாந்தியுறுக!

- சுபம் -

**அருள் நாகபாஸ்கரன**
சரனலை வடக்கு
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பிலும் தன்னிறைவு

சாவகச்சேரி வாரிவநாத சிவனுக்கு அண்மையாகப் பிறந்து பண்போடு வாழ்ந்து நல்லாசிரியையாய் நல்மாணவர்களை உருவாக்கி, கல்வி அதிகாரிகளின் நன்மதிப்புப் பெற்று பண்பாளனாம் சட்டத்தரணி திரு. வீ. பொ. கார்த்திகேசுவின் நன்மனைவியாக வாழ்க்கைப்பட்டு மனம் நிறைந்த மக்களைப் பெற்று பொறியியளாளர்களாக நாட்டுக்கு சேவை செய்யக்கண்டு மகிழ்ந்து மைந்தர்கள் ஊரில் இல்லாதபோதும் கணவன் சிறு சுகவீனத்தால் மரணமடைந்தபோதும் தளராது மனத்துணிவாக தன்கையாலே அவர் இறுதிக்கிரியைகளைச் செய்து ஊரார் வியக்கும்படி இருந்து தனக்கும் மைந்தர்கள் கடமைசெய்ய வரவில்லை என்ற குறைவராது தானாகவே அன்பு மகனிடம் சென்று மரணத்தை காலன் கையில் கொடுத்து அமரராகி இறப்பிலும் தன்நிறைவு கண்ட அமரர் கார்த்திகேசு மகேஸ்வரியின் சிரிப்புடன் கூடிய இன்முகத்தை மறக்கவே முடியாது. எம்மீது கொண்ட பாசத்தை எண்ணிவரும் கண்ணீரைக் காணிக்கையாக்கி அமரர் ஆத்மா சுவர்க்கத்திலும் கணவருடன் அன்புடன் சேர்ந்திருக்க எல்லாம் வல்ல வாரிவநாதப் பெருமானை மனமார வேண்டி வணங்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கே. கே. யோகநாதன்**
**குடும்பத்தினர்**
குமரகோட்டம்
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த அனுதாபங்கள்

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்திவ்வுலகு
திருவள்ளுவர் வாக்கு

மா, பலா, வாழை பல மலிந்த சோலைகளால் சூழப்பெற்ற சாவகச்சேரி எனும் பல வளங்கள் நிறையப் பெற்ற பட்டினத்தில் சைவ வேளாளர் குலத்தில் திரு. சிதம்பரப்பிள்ளை திருமதி. பொன்னம்மா அவர்கட்கு சற்புத்திரியாக திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்கள் அவதரித்தார். சிறிய வயதிலிருந்தே கல்வியில் நாட்டமுடையவரானபடியால் புகழ்பெற்ற ஆசிரியையாக திகழ்ந்தும் மெச்சக்கூடி வகையில் பணிசெய்து பல்லாண்டு காலம் கடமை புரிந்து இல்லறம் எனும் நல்லறத்தை இனிதே நடாத்தி குணக்குன்றாம் அறிவும் ஆற்றலும் மிக்க சட்டத்தரணியாம் எனது நண்பன் திரு. கார்த்திகேசு அவர்களை மணந்து பகீரதன், ரவீந்திரன், சுபேந்திரன், பிரகலாதன் எனும் நன்மக்களைப் பெற்றனர்.

மேற்படி வாழ்க்கைத்துணை நல்லாளின் கணவன் நண்பன் கார்த்திகேசு அவர்களும் நானும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களும் பால்ய வயது நண்பர்களாக இருந்தமையாலும் அவர்கள் இருவரும் எவ்விதம் அன்னியோன்யமாக வாழந்தாகள் என்பதை நன்கு அறிவேன். தூரதேசம் கனடாவில் சிலகாலம் வாழந்தாலும் நண்பன் கார்த்திகேசு இறைவனடி யெய்திய 1997ஆம் ஆண்டளவில் அவர் சுகயீனமுற்றிருந்த வேளை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் பார்க்கவும் மேலும் அவருடைய ஈமைக்கிரியை, அந்தியேட்டி முதலியவற்றிலும் பங்கு கொள்ளக்கூடிய அரிய வாய்ப்பு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

நங்கை நல்லாள் மகேஸ்வரியவர்கள் தனது இல்லத்தில் நண்பர்களுக்கும் மற்றயோர்கட்கும் சமூகத் தொண்டுகள் பல ஆற்றி அரிய சேவைகள் பல புரிந்த அருந்தவச் செம்மலாகும். அவர்கள் சில காலம் தன்னும் மற்றையோருக்கு சிரமம் ஏற்படுத்தாமல் ஆற்றெண்ணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளதை நாமறிவோம். அவர் ஆன்மா சாந்தியடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பேரிழப்பால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பல் மண்ணாவதுங் கண்டு பின்புமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பல
அடிசார்ந்து நாலுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையோ

*சாந்தி சாந்தி சாந்தி*
*வீ. என். சோமசுந்தரம்*

**வீ.எம். சோமசுந்தரம**
*கனடா*

7582, Magistrate Terrace
Mississa A6A
Ontario
L5 W1 K8
Canada.

## CONDOLENCE MESSAGE FROM PRESIDENT AND MEMBERS OF LIONS CLUB KALMUNAI TOWN FOR 31ST DAY REMEMBRANCE

All members of Lions Club of Kalmunai Town take this opportunity to express their sorrow and deepest sympathies in the event of demise of Mrs. Maheswary Karthigesu mother of Lion Eng. Bakeerathan. We all were delighted that she managed to get out of Jaffna to join her son Lion Bakee at Kalmunai. Any how, her dreams to live her long peaceful life with her eldest son was short lived unfortunately. Before getting acquinted with her most closely, she departed us so suddenly. We the members of Lions Club of Kalmunai Town express our sadness and sympathies to her sorrowing son Lion Eng. Bakeerathan once again let her soul rest in peace.

President,
Lion U. L. A. Azeez & Members of
Lion Club of Kalmunai Town.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நனைத்த நினைவுகள்

அமரர் மகேஸ்வரி கார்த்திகேசு அவர்கள் கல்முனையில் இறந்த செய்தி அனல் பிளம்பாக காதிலே வந்து நுழைந்தது. அனைவரும் துடிதுடித்துப் போனோம். மனித வாழ்விலே சத்தியத்தையும் சிவத்தையும் சுந்தரத்தையும் காண வேண்டும் என்ற ஆசை எல்லோர் உள்ளத்திலும் எழுவதுண்டு இவற்றைப் பேணவும் நிலைநாட்டவும், வளர்க்கவும் முற்படுபவர்கள் ஒரு சிலரே. அவர்கள் வரிசையில் அமரர் மகேஸ்வரியும் குறிப்பிட்டு சொல்லலாம். பாரெல்லாம் சிறப்புமிக்க சாவகச்சேரியில் வாழ்ந்த காலத்தில் இவர்களுடைய குடும்பத்தோடு நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டது. இவரது மகனாகிய ரவீந்திரனைக் காண்பதற்காக அடிக்கடி வீடு சென்று வருவேன். இவரது தோற்றம் என் மனக் கண்முன் நிழலாடுகிறது. களங்கமற்ற உள்ளம் நிமிர்ந்த பார்வை செல்வத்தை கண்டு பெருமை கொள்ளாத நிலை குழந்தைகளை உயர்த்திய செருக்கு அற்ற பெண்ணாகவே எப்பொழுதும் காட்சி தருவார். இவரது ஆசிரிய சேவையினை பிறர் பெருமையாகக் கூறக்கேட்டிருக்கிறேன்.

இவரது ஆர்வம், செயற்பாடு போன்றவற்றிற்கு தூண்டு கோலாக அமைந்தது அவரிடம் கசிந்து கொண்டிருக்கும் மனித நேயமாகும். குடும்பத்வர்களின் நிகழ்காலமும் எதிர்காலமும் செம்மையுற அதிக அக்கறை காட்டிச் சென்றுள்ளார். வீட்டிற்கு செல்லும் ஒவ்வொரு தடவையும் இன்முகம் பூத்திருக்கும். எனது குடும்பத்தவர்களுக்கு இவர்களும் இருதயத்தால் எப்பொழுதும் இணைந்திருப்பார்கள். இறைவனுக்கு கொடுக்கப்படுபவை இறைவ்னையையே சேரும் என்பதற்கிணங்க ஏழை, எளியோருக்கு இரக்கம் காட்டுவார்.

சாவகச்சேரி சின்னாபின்னமாக அழிந்து போன நிலையில் கல்முனையில் பகீதரனின் வீட்டில் வாழ்ந்து வந்தார். இறைவன் கட்டளைப்படி கணவனைத் தேடி பயணித்தார் என்பது இதயங்களில் ரணங்களாகி வலிக்கிறது.

இந்த வேளையில் நெஞ்சிலே நிறைந்த நினைவுகளை மாலையாக அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலிப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

**திரு. திருமதி வசந்த குமார்**
அரச விடுதி,
இல: 116/6, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஆசிரியை திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் நினைவலைகள்

# விதி செய்த சதி

அன்பு ஊட்டி ஆதரவு காட்டி, பண்பாய் வழிநடத்தி, பாசத்தால் இல்லம் ஆண்ட தெய்வம் எங்கே? கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தண்ணளியைப் பிழிந்து அறிவொழி தந்த ஆசிரியை எங்கே? அம்மா உங்களைத் தேடுகிறோம். இது என்ன சதி; காலனவன் உங்கள் உயிரைக் கல்முனையில் பறித்து கடவுளிடம் கொடுத்து விட்டான். உங்கள் அருமைச் செல்வங்கள் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து துடியாய்த் துடிக்கிறார்களே.

எனக்கும் மகேஸ்வரி அம்மையாரின் நினைவலைகள் முன்நிற்கின்றன. அவர் ஆண்டமனை திரையில் சகல வளங்களும் நிறைந்த சாவகச்சேரி நகரம். அங்கு அற்புதங்கொண்ட பெருமான் அருளாட்சி புரியும் 'வாரிவநாதர்' சிவன் கோயில் அமைந்திருக்கிறது. இங்கு புகையிரத நிலைய வீதியில் இவரின் இல்லம் பொலிவாகக் காட்சிதரும். உதவிகள் தேடியும், விடயங்கள் நிறைவேற்றி ஒழுங்காக்கிப் பரிசிலிக்கவும் வருவார் போவோருக்கு குறைவேயில்லை. என்னே இது ஒரு சட்டத்தரணியின் வீடாச்சுதே. சகல கலாவல்லுனரான நான்கு அழகுக் குழந்தைகள் தவழ்ந்து ஓடி ஆடி விளையாடிய மனை. அவர்களின் பிரபலத்தின் பெயரில் நன்மைக் காரியங்கள் நடைபெறுகின்றன. மழலைமொழி பேசும் பச்சிளம் பேரக்குழந்கைள் விளையாடிக் காட்சி தருகின்றனர். என்ன குறை பரிமளிப்பு, அக்கம், பக்கம், அயலவர், சுற்றத்தார், நண்பர்கள் எல்லோரையும் நேசக்கரம் நீட்டி குறைகள் விசாரித்த உத்தமி. இவருக்குப் பக்கபலமாக 'இராம இலக்குமணர்' போன்று இவரின் அருமைச் சகோதரி நாகேஸ்வரி இருக்கிறார்.

இவரின் புதல்வர்கள் தொழில் வாய்ப்புக் காரணமாக அங்குமிங்குமாக தூர இடங்களுக்குச் சென்று விட்டார்கள். இவரின் பிரிய நாயகரும் முக்கிய பொறுப்புக்களை இவர் தலையில் சுமத்தி நோய்வாய்ப்பட்டிருந்த அவர் காலன் கையில் சிக்கினார். பத்தினியின் மனம் சோர்ந்து வாடுகிறது. ஆறுதல் கூறி பொறுப்பேற்கும் மக்கள் அகல, அகல யோசனை மிகுதியால் பெலவீனம் என்றாலும் அன்புச் சகோதரி கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமொத்து இயங்கி அன்புச் சேவையும், ஆதரவும் தருகிறார். இதுமட்டுமா? தென்மராட்சிக்கு ஏற்பட்ட அகோரமான தாக்குதலால் அத்தனை உயிரும் இடம்பெயர வேண்டிய நிலை. வருத்தம், பலவீனம், பயம், ஆதரவில்லை தவிக்க வேண்டியதுதானே. எல்லாம் விட்டு உயிரைமட்டும் ஏந்திக்கொண்டு மானிப்பாய்க்குச் சென்றிருக்கிறார்கள். நடந்தும், இருந்தும் பலவீனம் தாங்காத அல்லோலத்தில் தஞ்சமடைந்தார்கள். ஏற்கனவே நோய்வாய்ப்பட்ட உடம்பல்லோ எத்தனை வருத்தங்கள் சேரும்.

இவர் ஏன் வருந்த வேண்டும். இவரின் மூத்த மகன் பகீரதன் (பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் - அம்பாறை) அவரின் அரவணைப்பிலும் இருந்து அனுபவித்திருக்கலாமே? எவ்வளவு வசதியும் சிறப்புமாக இருந்திருக்கலாமே.

சோதரி மகேஸ்வரி அம்மையாரின் இரண்டாவது மகன் இரவீந்திரனையும் மலர்ந்த முகத்துடன் அவரின் பாரியாரையும் செல்லக்குட்டி பெண்ணையும் காணும் பாக்கியம் கனடாவில் நமக்குக் கிடைத்தது. அந்தக் குழந்தைப் பெண்ணின் மழலைக் கதை; கேட்க என்ன ஆசை. எல்லோருடனும் நன்றாகச் சேருவார். இவற்றை எல்லாம் ஆசைதீரக்கூறி வர்ணிக்கலாமென்று இருக்க என்ன மாயம்? அந்த மகனிடமிருந்தே சோகத்துடன் இவரின் மரணச் செய்தி கிடைக்கிறது. நம்ப முடியவில்லை. அவதிப்பட்டு இருக்கும்போது எங்கள் மகன் விரிவாகக் கூறினார்.

என்ன செய்வது மனித வாழ்வின் நியதி இது என்றால் எல்லோரும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். இறைவன் நமக்குத் தாங்கும் இதயம் தரட்டும். அமரரின் செல்வக் குமாரர்களுக்கு அவரின் நினைவாலயம் ஆறுதல் தரட்டும். சகோதரி நாகேஸ்வரி அம்மையாரை நேரில் காணுவோம். அமரருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகினறோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இராசமணியம்மா - காங்கேசு**
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியின் இருப்பிடம் மகேஸ்வரி அக்கா

எமது திருமண நிகழ்விலே தான் ஆசிரியை மகேஸ்வரி அவர்களை அறிமுகமானேன். எனது துணைவியாரின் மைத்துனியான இவர் அன்பும், அமைதியுமே உருவானவர். தமது இல்லத்தை நாடிச் செல்வோரை இன்முகம் காட்டி உபசரித்து அளவளாவுவதில் அவருக்கு அவரே நிகர். அடிக்கடி யாழ்நகரில் அமைந்திருக்கும் எமது இல்லத்திற்கு வருகை தந்து குசலம் விசாரிப்பார். ஆசிரிய சமூகத்திற்கு ஒரு உதாரண புருஷராக வாழ்ந்து காட்டியவர். சிறந்த ஆசிரியை என்ற நன்மதிப்பைப் பெற்றவர்.

நாம் சாவகச்சேரி சென்றால் அவரது வீட்டிற்குச் சென்று சுகசேமங்கள் விசாரிப்ப துண்டு. அவரிடம் உள்ள மனப்பாரங்களை எம்முடன் பகிர்ந்து அமைதி பெறுவார். அவருக்கு தமது புதல்வர்கள் தன்னருகில் இல்லை என்ற மனக்குறை வெகுவாக வாட்டியதை நாம் உணரக் கூடியதாக இருந்தது. இவர் தனது சகோதரி நாகேஸ்வரியின் அரவணைப்பிலும், ஆறுதலிலும் தனது அமைதியைக் கண்டார்.

கடைசியாக இடம்பெற்ற புலம்பெயர்வின் பின் அன்னாரைக் காணும் வாய்ப்பு ஏற்படவில்லை. இது எமக்கு குறைபாடாகவே இருந்தது.

அன்னாரின் மறைவை அவரது மகன் பிரகலாதன் மூலம் இலண்டன் மாநகரத்தில் கேள்வியுற்று நானும் எனது துணைவியாரும் பிள்ளைகளும் அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

நன்றி

திரு. க. சிவராசா (ஆசிரியர்)
திருமதி. சி. நாகேஸ்வரி
நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படியம்மா உன்னை மறப்பது

சாவகச்சேரி திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு இளைப்பாறிய ஆசிரியை அன்னைக்கு அடியேனின் ஆர்ப்பரிப்பு

சாவகச்சேரி ஈன்றெடுத்த மகேஸ்வரித் தாயே - பல
சான்றேரை ஈன்று தந்த மகேஸ்வரித்தாயே
கார்த்திகேசு ஐயா கரம் பிடித்த மகேஸ்வரித்தாயே
எம்மை காலமெல்லாம் அழவைத்த தாயே

பத்து மாதம் சமந்து பெற்ற - உன்
அன்பு மகன் பகீரதனை
பண்பாளனாக பிரதி பணிப்பாளனாக
பாருக்கு ஈந்து தந்த அன்புத்தாயே
பாதி வழியில் தவித்து நின்ற உன் அன்பு மகனுக்கு
பாதை காட்ட ஓடிவந்து பணிவிடை செய்வதற்கு
பல மைல் தொலைவிலிருந்து சோதரி நாகேஸ்வரியொடு
வந்த நீ இடைநடுவில் விட்டுவிட்டு பரகதி சென்றுவிட்டாயே
**எப்படி அம்மா உம்மை மறப்பது?**

கனடாவில் வாழ்ந்து வரும் ரவீந்திரன்
அவுஸ்ரேலியாவிருக்கும் சுபேந்திரன்
லண்டனில் வசித்து வரும பிரகலாதன்
கல்முனையில் கல்லறை ரெண்டு பெற்ற பகீதரன்
நால்வரையும் பெற்றெடுத் அன்புத் தெய்வமே
நாற்சுவருக்குள் உறங்கவா நீ இங்கு வந்தாய்
**எப்படி அம்மா உம்மை மறப்பது?**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, கொழும்பில்
ஆரம்பக் கல்விதனை அன்போடும், அழகோடும்
அடியெடுத்து வைக்கும் மாணாக்கருக்கு
மனதில் பதியவைத்து அத்திவாரமாய் வித்திட்டாயே
காலங்கள் மாறினும் கோலங்கள் மாறினும்
காற்றசைய மறந்தாலும் கடலசைய மறந்தாலும்
**உன் அன்பை எப்படி அம்மா உம்மை மறப்பது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் செய்த கோலத்தினால் சாவகச்சேரியிலிருந்து
மானிப்பாய் சென்று மனை புகுந்தீரே
மகனின் துயரம் கேட்டு மானிப்பாயிலிருந்து
கல்முனை நகருக்கு கால்பதித்தீரே
மகிழ்ச்சிடைந்தோம். மனநிறைவடைந்தோம்
மங்களம் நடக்குமென்று வரவால் நினைத்தோம்.
காலமும் நேரமும் வந்து விட்டதென்று
கம்மியளவும் தெரியவில்லையே அம்மா
**எப்படி அம்மா உம்மை மறப்பது?**

பல தடவை நான் வந்து கதைக்கும்போது
பண்புடனும் பாசத்துடனும் பல கதை கூறுவீரே
மகனையும் பேத்தி மதுராவையும் பற்றி
ஆர்வத்துடன் அளவளாவுவீரே
அம்மா நீ மறைந்தாலும் உன் முகம் மறையவில்லை.
உன் பேத்தி மதுராவில் அதைக் காண்கின்றோம்.
இறைவன் உம்மை ஆட்கொண்டாலும்
இவ்வுலகம் போற்ற நீ செய்த சேவைகள்
போதும் தாயே! போதும் தாயே!!
**எப்படி அம்மா உம்மை மறப்பது?**

ஆக்கியோன் :
P. D. A. **ஜெயக்குமார்** (T.A.)
குருக்கள் மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

சைவமும், தமிழும் தனைத்தோங்கும் நகரிலே (சாவகச்சேரி)
செவ்வனேவே வாழ்ந்த சீர்சிறந்த அம்மையே!
வையமெலாம் உனைப் போற்ற, மாதர் குலம் உனை வாழ்த்த,
செம்மையாய் வாழ்ந்த சீர் சிறந்த அம்மாவே!

அண்டமெலாம் வாழ அம்மைக்கு இடமிருந்தும்
அன்புமகன் வசமிருந்து அடியவனை அடைந்தனையோ

மக்கள் பல பெற்று மகிழ்வுடனே வாழந்தாலும்
தக்க காலத்திலே தனையானாம் பகிரதனை
உற்றவ அரவணைப்பில் உறவாடி வாழ்வதற்கு
மிக்க மகிழ்ச்சியுடன் விரைந்து வந்தாயே!

சட்டத்தரணின் சரிபாதியாய் நீயிருந்து
திட்டத்துடனே பல செயல்களையும், நீ புரிந்து
பெற்ற புதல்வர்களை பிறர் போற்ற, நீ மகிழ்ந்த
முத்தின்ற முழுமதியே, முதலான அம்மையே
நித்தம் உன்னை நினைத்து, நீர் சொரிய வேதனையால்,
பெற்ற புதல்வரெல்லாம் பேதலித்து மெய் சேர
சற்று கூறாமல் சடுதியாய் சென்றதெங்கே...?

மனையாளின் மறைவினால் மனம் சோர்ந்த மகன் தனையும்,
தாயாளின் பிரிவினால் தடுமாறும் மகன்களையும்
கனிவான மொழியினால் களிப்படைய நீ வைத்த
நிலையான அம்மையே நீ சென்ற மாயம் என்ன...?

ஆறாத் துயரினிலே அனைவரையும் நீ விட்டு
பேறா உலகிற்கு பிறப்பெடுத்துச் சென்ற
ஆரா அமுதே! அம்மையே! மகேஸ்வரியே!
இறைவனடி சேர இறைஞ்சுகின்றோம் கண்ணீரால்.

துயரினால் துயருறும் உற்றார்
**வைரமுத்து சிவலிங்கம்**
மோகன் ஸ்டோர்ஸ்
யாட் றோட், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN APPRECIATION - MAHESWARY

The sudden demise of Maheswary Karthigesu of Station Road, Chavakachcheri on 15th Decenber at the age of 72 a few days prior to her Birthday which fell on 20th December was a shock to many of us, her friends and relatives. Her husband late Mr. Karthigesu a leading Attorney - at - Law practicing at Jaffna preceeded her 3 years ago. The loss of her husband and her eldest Daughter in - law Pathmini made Mahes very sad. Unfortunately she was also displaced from her home at Chavakachcheri due to the war and was Temporarily living in Manipay under Stress It's only 2 months ago after much persuation Mahes joined her Grand daughter Mathura and Widowed eldest son Bakeetathan Deputy Director of Irrigation, Kalmunai Mahes was very happy to live with her Grand Daughter and son but it was short lived and death so Cruell took her away. Late Karthigesu and I had been friends for over 45 years and lived together in Colombo for years when he was in Govt. Service before he was sworn in as an Attroney - at - Law. I met Mahes at the wedding and therefter Karthi Family and we were great friends. Whenver I go Jaffna I always go to Chava and spend a day with the family, likewise when Karthi and Mahes come to Colombo they were our guests and we spent Very happy and memorable days which will be nomore having lost both. Mahes was blessed with four sons Bakeerathan (Sri Lanka) Subendran (Australia) Raveendran (Canada) Pirahalathan (U.K.) Mahes was happy that her 3 sons were married and even fixed an engagement for the unmarried son just before her demise. She was a blessed lady and always satisfied in life. She had many friends and relations in Sri Lanka and aborad and kept in touch with them by letters and Telephone calls They would all miss her with Tears of sorrow for ever. Our sincere heartfelt condolences to the family and pray for her spul to attain eternal rest. Fondly remembered and missed by your everloving friends and relations.

**S. Santhirasegaram**
5, Huitcherson Square
Scaraborough on taries,
MIB1C5,
Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

பாசமிகு தாயாக எல்லோரினதும் அன்பிற்கும், பாசத்திற்கும் வாழ்ந்து மறைந்த எனது தாயாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட சகலருக்கும் மேலும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எனது தாயார் சுகயீனமுற்றிருந்த காலத்தில் பல வகைகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த நண்பர்கள், அயலவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு ஈமக்கிரியை கருமங்களை நிறைவேற்று வதற்கு ஒத்தாசை வழங்கிய சகலருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,

மகன்

**கா. பகீரதன்**

மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,

விடுதி,

யாட் வீதி, கல்முனை.

றோயல் - சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org